**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை துணைத்தேர்வு, ஜூன் / ஜூலை 2026**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல் மற்றும் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூன் / ஜூலை 2026, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) மற்றும் +1 ARREAR துணைத்தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் 13.08.2026 (**வியாழக்கிழமை**) **அன்று பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்குச் சென்று Notification-ஐ Click செய்தவுடன் **Hr. Sec. Supplementary Examinations, JUNE/JULY- 2026 - Scan Copy Download"** என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து அதனை 14.08.2026 (**வெள்ளிக்கிழமை**) **அன்று முற்பகல் 11.00 மணி முதல்** 17.08.2026 (**திங்கட்கிழமை**) **அன்று** மாலை 5.00 **மணிக்குள்** (15.08.2026 **மற்றும்** 16.08.2026 **அரசு விடுமுறை நாட்கள் நீங்கலாக**) சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு

--2--

ஆகிய மாவட்டங்களில் முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திலும் ஒப்படைத்து, அதற்குரிய கட்டணத் தொகையினை பணமாகச் செலுத்த வேண்டும்.

<u>மறுமதிப்பீடு</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

<u>மறுகூட்டல்</u>

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

விடைத்தாள் நகல் பதிவிறக்கம் மற்றும் மறுகூட்டல்/ மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான சந்தேகங்களுக்கு 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

ஒம்/-

இயக்குநர்

நாள் : 12.08.2026

இடம் : சென்னை – 600 006.